# களஆய்வு நெறிமுறைகள்

**பேரா.ஞா.ஸ்டிபன்,**
தமிழியல்துறை,
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி.

# அறிமுகம்

நாட்டார்வழக்கற்றியல், மானிடவியல், சமூகவியல் போன்ற சமூகஅறிவியல் புலங்களின் ஆய்வுப் பொருள் களஆய்வின் மூலமே பெறப்படுகின்றன. எனவே இப்புலங்களில் களஆய்வு எவ்வாறு செய்யப்பட வேண்டும் என்பது தொடர்பான நெறிமுறைகள் உருவாக்கப் பட்டுள்ளன. இந்நெறி முறைகள் பற்றிய அறிவில்லாமல் களஆய்வு செய்வது ஆய்வின் மதிப்பைக் கேள்விக் குள்ளாக்கிவிடும். நாட்டார்வழக்காற்றியல் புலம் சார்ந்த களஆய்வு நெறிமுறைகளை மிகச் சுருக்கமாகக் காண்போம்.

# ஆய்வுக்களம்

- ஆய்வுக்களம் என்பது குறிப்பட்ட ஒரு வாழிடத்தைக் குறிக்கும். நாம் தரவுகள் சேகரிப்பதற்காகத் தெரிவு செய்துள்ள வாழிடத்தைக் குறிக்கும். அது ஒரு பண்பாட்டுக் களம் அல்லது வெளி. அந்த வாழிடத்தை எவ்வாறு தெரிவு செய்வது? அந்த வாழிடத்தின் எல்லை யாது? அந்த வாழிடத்தில் நாம் என்ன எதிர் பார்க்கின்றோம்? அங்கு யார் வாழ்கின்றார்கள்? அங்குப் போய் என்ன செய்யப்போகின்றோம்? நம்முடைய நோக்கம் என்ன? என்பன போன்ற தெளிவுகள் களஆய்வைத் திட்டமிடும் போது வேண்டும்.

- பொதுவாக ஆய்வுக் களத்தைத் தெரிவு செய்யும் போது நிருவாக எல்லை, நமக்குச் சென்று வருவதற்கான வசதி, நமக்கு நன்கு அறிந்தவர்கள் இருக்கும் இடம், சொந்த சாதியக்குழு அல்லது சமயத்தவர் இருக்கும் இடம் என்பன போன்ற தற்சார்பான அளவுகோல்களைக் கொண்டு ஆய்வுக் களத்தை முடிவுசெய்வது இயல்பு. இந்த அளவுகோல்கள் ஆய்வின் இன்றியமையாமையை இரண்டாம் நிலைக்குத் தள்ளிவிடும்.

# சில வழிகாட்டுதல்கள்

- ஆய்வுக்குத் தெரிந்து கொள்ளும் ஆய்வுப்பொருளே ஆய்வுக்களத்தைத் தீர்மானிக்க வேண்டும். அவ்வாறு முடிவுசெய்யும் போது சிலவற்றை மனங்கொள்ள வேண்டும்.
- நிருவாக எல்லையைவிட பண்பாட்டு எல்லைக்கு முன்னுரிமை தரலாம்.
- ஒரு குறிப்பிட்டக் குழு வாழும் அல்லது அக்குழுக்கள் வாழும் இடங்களை எல்லையாகக் கொள்ளலாம்.
- ஒரு வழக்காற்று வகைமை வழங்கப்படும் வழங்கிடத்தைத் தெரிவுசெய்யலாம்.

# அடிப்படைப் பணிகள்:

களப்பணியைத் தொடங்கும் முன் சில அடிப்படைப் பணிகள் செய்ய வேண்டும்.

- ஆய்வக்களத்தின் சமூகப் பண்பாட்டு வரலாறை அறிதல். முன்னாய்வுகள், அரசு கையேடுகள், வரலாற்று நூல்கள் மற்றும் பிற ஆவணங்கள் வழி ஆய்வுக்களம் பற்றிய முழுமையான அறிவைப் பெறுதல்
- ஆய்வுக் களத்தின் வரைபடம் தயாரித்தல்
- ஆய்வுக்களத்தில் வாழும் மக்கள் குழுக்கள் பற்றிய ஆவணங்கள் அடிப்படையிலான வரலாறு, பண்பாடு, இனவரைவியல் சேகரித்தல்
- ஆய்வுப்பொருள் பற்றியத் தரவுகள் கிடைக்குமா? ஆய்வுக்கள மக்களின் மனநிலை, அங்குள்ள அரசியல், தகவலாளிகளின் வளம் போன்றவற்றை முன்னோட்டக் களஆய்வு (ீைடழவ ளவரனல) நிகழ்த்தி அறிதல்.
- தரவுகள் சேகரிப்பதற்குத் தேவையான வினாநிரல் மற்றும் உற்றுநோக்கலுக்குரிய குறிப்புகள் போன்றவற்றைத் தயாரித்தல்.
- களஆய்விற்குத் தேவையான கருவிகள் மற்றும் வழிகாட்டிகள் குறித்து முடிவுசெய்தல்.
- ஆய்விற்கான ஆய்வுச் சிக்கலைக் கண்டறிய வேண்டும்.

# தரவு / தகவலாளி

- ஆய்வுக்களத்தில் கிடைப்பவை எல்லாம் தரவாககாது. ஆய்வுப் பொருள் தொடர்பாக முன்வைக்கும் ஆய்வுச் சிக்கலை விடுவிக்கப் பயன்படும் செய்திகளே தரவாகும்.
- களஆய்வின் போது எது தரவு? எது தரவு இல்லை என்று முடிவு செய்ய இயலாது. எனவே கிடைப்பனவற்றைச் சேகரிக்க வேண்டும். இருப்பினும் ஆய்வுச் சிக்கலை முதன்மைப்படுத்தியேத் தரவுகளைச் சேகரிக்க வேண்டும்.
- எது தரவு? என்பதை உங்களது ஆய்வுச் சிக்கலே முடிவுசெய்யும். தரவு பற்றிய கருத்தமைவு ஆய்வின் தன்மை, பயன்படுத்தும் கோட்பாடு, ஆய்வின் நோக்கம் ஆகியவற்றின் அடிப்படையிலேயே பொருள்கொள்ளப்படும்.
- ஆய்வுக்களத்தில் எல்லாரும் தகவலாளிகளாக இருப்பதில்லை. தகவலாளிகளில் இருவகை உண்டு.
- முனைப்பான மரபாளர், முனைப்பற்ற மரபாளர். முனைப்பான மரபாளர் சில வழக்காறுகளில் ஆர்வமுடையவராக இருப்பார். முனைப்பற்ற மரபாளர் வழக்காறுகளை அறிந்திருப்பார். ஆனால் ஆர்வமற்றவராக இருப்பார். முனைப்பான மரபாளர்களைத் தகவலாளிகளாகத் தேர்வு செய்ய வேண்டும்.

# களஆய்வாளன் தகுதியும் அறங்களும்

- களஆய்வாளனுக்குக் கல்வித் தகுதிக்கான வரையறை இல்லை. ஆர்வம் இருந்தால் போதுமானது.
- பொறுமை, நேர்மை, சமமாக மதிக்கும் மனம், அன்பு, உண்மை ஆகியவை இன்றியமையாதவை.
- தகவலாளிகளிடம் பொய் வாக்குறுதிகள் தரக்கூடாது. ஏமாற்றக் கூடாது.
- தரவுகளைத் திரிக்கக் கூடாது. தரவுகளைப் பயன்படுத்த அனுமதி பெறவேண்டும்.
- தகவலாளியைச் சக ஆய்வாளராக அல்லது ஆசிரியராக மதிக்க வேண்டும்.
- உரிய நோக்கீடு இன்றி எந்தத் தரவையும் பயன்படுத்தக் கூடாது.

# களஆய்வு உத்திகள்

- நேர்காணல், வினாநிரல், குழுக் கலந்துரையாடல், உற்றுநோக்கல் ஆகிய உத்திகள் பெரும்பாலும் களஆய்வில் பின்பற்றப்படும் உத்திகளாகும்.
- நேர்காணல், வினாநிரல் போன்றவற்றிற்கு உரிய கேள்விகள் திட்டமிடப்பெற்றுத் தயாரிக்க வேண்டும். அடிப்படைப் பணிகளைச் செய்தால்தான் இவற்றைச் செய்ய இயலும்.
- திறந்த நேர்காணல் விரும்பத்தக்கது. இருப்பினும் இதற்கும் ஆய்வுச் சிக்கலை மையமாகக் கொண்டு திட்டமிடப்பெற்ற கேள்விகள் வைத்திருக்க வேண்டும்.
- உற்றுநோக்கல் களஆய்விற்கு மிக இன்றியமையாத உத்தியாகும். ஒரு பண்பாட்டு மரபை நேர்காணல் மற்றும் வினாநிரல் மூலம் அறிவதைவிட உற்றுநோக்கல் வழியே புரிந்து கொள்வதே சிறப்பானது. நாம் எதிர்பாராதத் தரவுகள் உற்றுநோக்கலின் மூலமே பெரிதும் சாத்தியமானது.

# ஆவணப்படுத்துதல்

- குறிப்பெடுத்தல், ஒலி,ஒளி ஆவணப்படுத்துதல் போன்ற உத்திகளும் பயன்படும்.
- எத்தகைய உத்திகளைப் பயன்படுத்தினாலும் ஒவ்வொரு நாள் களஆய்வு குறித்தும் ஒருவிரிவான அறிக்கை தயாரிக்க வேண்டும்.
- சேகரிக்கும் அனைத்துத் தரவுகளும் சூழல், பயன்பாடு, தகவலாளி பற்றிய குறிப்புகள், சேகரிக்கும் முறை ஆகியவற்றோடு பதிவு செய்யப்பட வேண்டும்.
- ஆய்வுக்குட்படுத்தும் குழுவின் இனவரைவியலைச் சேகரிப்பதிலிருந்து களஆய்வைத் தொடங்க வேண்டும்.

# களஆய்வுக்குப் பின்

- சேகரித்தத் தரவுகளை வகைப்படுத்தல். தரவுகளை மதிப்பீடு செய்தல்.
- மீண்டும் களஆய்வு தேவைப்படுகின்றதா? என்பதை உறுதிசெய்தல்.
- தரவுகளுக்கிடையிலான உறவுகளைக் கண்டறிதல்.
- ஆய்வுச் சிக்கலோடு தொடர்புப்படுத்தல்
- கருதுகோள் ஒன்றை உருவாக்குதல்.
- ஆய்வுச் சிக்கலுக்கானத் தெளிவு உள்ளதா எனச் சோதித்தல்.

# ஆய்வறிக்கை

- தரவுகள் போதுமானது என்று உறுதி செய்யப்பட்டபின் ஆய்வறிக்கையைத் திட்டமிட வேண்டும்.
- தரவுகளைத் தர்க்கத்தின் அடிப்படையில் ஒருங்கிணைக்கும் வாய்புகளைக் கண்டறிந்து அதன் அடிப்படையில் ஆய்வறிக்கை திட்டமிடப்படல் வேண்டும்.
- ஆய்வுச் சிக்கலுக்கானத் தெளிவு உறுதிசெய்யப்பட்டதும் ஆய்வறிக்கையைத் தயாரிக்கலாம்.

நன்றி